SLECIC

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அழைக்கின்றது.

## 01. கனிஷ்ட முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - JM 1-2 (தரம் II) - 01 பதவி

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் சந்தைப்படுத்தல், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகத்தில் அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளில் ஒரு இளமாணிப் பட்டம்
2. பதவிக்குரித்தான விடயப்பரப்பில் இயைபுடைய ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

2. பதவிக்குரித்தான தொடர்புடைய பாடப்பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1) வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகாரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்:** JM 1-2 ரூபா [74,010-10X1, 360-18X2,040-124,330] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்)+ வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்பாடல் கொடுப்பனவுகள் + KPI ஊக்குவிப்பு + மருத்துவ நன்மைகள் + மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

## 02. கனிஷ்ட முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) – JM 1-2 (தரம் II) - 01 பதவி

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளில் ஒரு இளமாணிப் பட்டம்
2. பதவியுடன் தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்
3. பதவியுடன் தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் கூட்டுத்தாபனம், சபை அல்லது கீர்த்தி வாய்ந்த நியதிச்சட்ட நிறுவனமொன்றில் தகைமைக்குப் பின்னர் 05 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. பதவியுடன் தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் கூட்டுத்தாபனம், சபை அல்லது கீர்த்தி வாய்ந்த நியதிச்சட்ட நிறுவனமொன்றில் தகைமைக்குப் பின்னர் 10 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம் :** JM 1-2 ரூபா [74,010-10X1, 360-18X2,040-124,330] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + KPI ஊக்குவிப்பு மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**பொது நிபந்தனைகள்**

சகல விண்ணப்பதாரர்களும்

- இலங்கைப் பிரஜைகளாகவிருக்க வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமைகளை மேற்கொள்வதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் (https://www.slecic.lk/) எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்திற்கு பிரவேசிக்குமாறு வேண்டப்படுகின்றனர் என்பதுடன் மேற்கூறிய பதவிகள் தொடர்பான விபரமான தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சபை என்பவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்களை விடுவிக்க முடியும் எனும் பரிந்துரை சகிதம் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய நிறுவனங்களின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்புடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்றுபகர்வோரின் விபரங்கள் சகிதம் 2026 நவம்பர் 02ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிலை 4, NDB-EDB டவர், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.